சிவமயம்

குமரகுருபரன்



மலர் 14] 1963-ஞ கார்த்திகை-மீ 1ம் உ (17-11-63) [இதழ் 11

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரு. 1¾

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை - 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	சிதம்பரச்செய்யுட்கோவை (கட்டுரை 74) ...	553
2.	நீதிநெறிவிளக்கம் (உரை நடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்) ...	557
3.	சுப்பிரமணியர் விருத்தம் ...	561
4.	நாலும் மூன்றும் ...	563
5.	தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள். பொழிப்புரையும் ஆங்கிலமொழி பெயர்ப்பும்	568
6.	திருவருட்பயன்—தெளிவுரை ...	569
7.	அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு).	572
8.	பாம்புர நன்னகரார் ...	574
9.	கடிதப்பா	581
10.	சும்மா ...	583
11.	ஈங்கோய் இலக்கியம்	593
12.	Hymns of the Tamil Saivite Saints	600

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 14 || சோபகிருது௵ கார்த்திகைத்திங்கள் 1ம்வ [17-11-63] || இதழ் 11

சிதம்பரச் செய்யுட் கோவை

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

[கட்டுரை 74]

தில்லைச் சிதம்பர தரிசனம் பிறவித் துன்ப நீக்கத்தைத் தலைமையாகக் கொண்டு நிற்கும் பெருமை யுடையது. பாச வீடும், சிவப்பேறும் ஆகிய இரண்டும் சேர்ந்ததே சைவசித்தாந்த முத்தியாகும். துன்ப நீக்கம் இன்ப ஆக்கம் என்பவை அவற்றை ஒருவாறு சுருக்கிக் கூறுவன ஆயினும், அத்துணைச் சிறப்புடையன அல்ல. துக்க நிவிர்த்தி சுகப்ராப்தி, என்பவற்றின் மொழி பெயர்ப்பு அவை. ஏகதேச துக்க நிவிர்த்திக்கும் ஏகதேச

சுகப்ராப்திக்கும் அவற்றை ஆண்டால் அவ்வாட்சி பெருந் துன்ப நீக்கத்தையும் பேரின்பாக்கத்தையும் குறித்து வழங்கின வாக நில்லாது. பாசவீடு எனின், மும்மல நீக்கத்தையே குறிக்கும். சிவப்பேறு என்பதில் ஐயம் இராது. சிதம்பர தரிசனம் பாச வீட்டையும் சிவப்பேற்றையும் பயக்க வல்லது. மக்கள் எமபயம் தீர்த்துக்கொள்ளற் பொருட்டு விரும்புவதும் முயல்வதும் எவ்வளவு! அவ்வளவு பாச வீடுபெற விரும்பி முயல் வாரல்லர் மக்கள். நடராச தரிசனத்தால் எமராச தரிசனம் இல்லாதொழியும் என்பதற்கு எத்தனையோ உலக வசநம் உள்ளன. அவற்றை அறிந்த ஆசிரியர் குமரகுருபர முனிவரர், தில்லையின் எல்லையைச் சேரவல்லவர், எமன் 'வா வா' என்று அழைக்கும் வேளையில் 'வாரேம்' என மறுக்கவும் வல்லவர் ஆவர்; அவ்வல்லமை இல்லாதவர் 'கூகா' எனக் குரைப்பவரே என்றருளினர்.

"கூகா என்று குரைப்பதல் லால்சமன்
வாவா என்னில் வரேம்என வல்லிரே
தேவே சன்பயில் தில்லையின் எல்லையில்
சேர்வீ ரேல்அது செய்யவும் வல்லிரே."

இதில், உரைத்தவாறு 'கூகா' என்று குரைப்பது, உலகிய லுண்மை. இதனைக் கந்தரநுபூதியும், "கூகாஎன என் கிளை கூடிஅழப், போகா வகை மெய்ப் பொருள் பேசிய வா, நாகாசல வேலவ நாலு கவி, த்யாகா சுரலோக சிகாமணியே" என்பதன் தொடக்கத்தில் அறிவிக்கின்றது. வேறு பலரும் இவ் வழக்கைக் குறிப்பை அறிவித்தனர். 'நாகாசலம்' திருச்செங்கோடு, திருப்புகழில், கொங்கின் புசககோத்திரி பங்கம்களையும் ஆய்க்குடி' என வந்தமை காண்க. அதிற் புஜங்கம் என்பது புசகம் எனச் சந்தம் பற்றிக் கொள்ள நின்றது.

'குரைத்தல்' என்பது நாய்க்கே உரிய செயல். அவ் வுண்மை தெரியாமல் மக்கள் அதை வழங்குகின்றனர். இப் பொழுதும் ஏன் ஐயா கூச்சல் போடுகிறாய், கூச்சல் இடுகிறாய் என்னும் வழக்கம் இருக்கிறது. குரைத்தல்–குரைச்சல்–கூச் சல் என மருவிய உண்மையை அறிந்தோர், நாயின் இயல்பை

மக்கட்கு ஏற்றி வையார். கத்துதல் வேறு குரைத்தல் வேறு. கழுதை கத்துகிறது; நாய் குரைக்கிறது என்பவற்றை மாற்றிக் கழுதை குரைக்கிறது. நாய் கத்துகிறது எனல் மரபாமோ? குரைத்தல் என்பதற்குக் கத்துதல் என்று பொருளுரைத்தவர் என்ன கருதினரோ? யாம் அறியோம்.

'சமன்' என்பது 'நடுவன்' என்னும் தமிழ்ச் சொல்லின் பொருளது.

வா வா என்னில் வரேம் எனவல்லிரே என்பது வினைச் சொற்றொடர். ஏகாரம் வினாப் பொருளது. இதில், 'வாரேம்' எனற் பாலது முதல் குறுகி நின்றது. வாராமை தாராமை என்னும் வழக்கு வழுவிலாதது. அவ்வழக்கைத் தலைக்குறுக் கம் ஆக்கி, வராமை தராமை எனல் தமிழ் மரபன்று. பிற்காலத் தில் உற்ற பிழைவழக்கு அது.

"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்".

வா, தா, போ, கா என்னும் முதனிலைகளுள் முன்னவை எதிர் மறையில் முதல்குறுகி நில்லா. பின்னவை உடன்பாடு எதிர் மறை இரண்டினும் முதல் குறுகுதல் இல்லை. முன்னவை உடன் பாட்டில் வந்தான், தந்தான் எனக் குறுகுதல் அறிக. பொகான் (போகான்) கவான் (காவான்) எனில் எய்தும் குற்றம், வரான் தரான் எனில் எய்தும், 'மீண்டு வாராவழி யருள் புரிபவன்' 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாராநெறி' தாரா அருள் ஒன்றின்றியே தந்தாய்' என்பவற்றை நோக்குக.

'தேவேசன்' என்பது தேவதேவன், தேவாதிதேவன் என்பவை முதலிய திருமுறை வாக்குக்களைப் போலப் பொருள் கொள்ள நின்றது. இந்திரனைக் கோடல் ஈண்டுப் பொருந்தாது. குமர குருபரர் காலத்தில் தில்லைச் சிதம்பர முன்றிலில் திருமால் வரங் கிடந்தான் என்று கொள்ளத் தட்டில்லை. அதனால், 'தேவேசன் பயில் தில்லை' என்றதற்குத் திருமால் உறையும் தில்லை எனில் ஒரு சிறிது இயைபு உண்டு எனக் கொள்ளலாம். இந்திரனைக்

கோடல் எவ்வாற்றுலும் பொருந்தாது. திருமாலைத் தேவேசன் என்னும் வழக்கு உளது. 'தேசங்கள் தொழ நின்ற திருமாலால் பூசனை' எனச் சிவபிரானைப் போற்றியதுணர்ந்தால், திருமாலை நம்சமயாசாரியர் எத்துணைப் பெருமையில் வைத்துணர்த்தினர் என்பது தெளிவாகும். ஆயினும், அகந்தையகத்திற் சுகந்தை வருமோ?

தில்லையின் எல்லையிற் சேர்தலே எமபயத்தை ஒழிக்க வல்லதாயின், எல்லைக்குட் சென்று நடராசதரிசனம் பெற்றவர்க்கு, அப்பேறு எமராச தரிசனம் இல்லாமல் ஒழிக்கும் என்பது கூறல் வேண்டுமோ?

'சேர்வீரேல்' என்றது சேர்தலின் அருமையை உணர்த்தி நின்றது. இதில் ஏனில் என்றது ஏல் என மருவிற்று. அஃது ஆயின் என்னும் பொருள் பயப்பது. என்று சொல்லின் என்னும் பொருள் ஈண்டுப் பொருந்தாது.

'அது' என்றது வாரேம் என்று சொல்லும் வன்சொல்லை. வன்மையைக் குறித்த சொல் வன்சொல். வன்சொல் என்றது இடத்திற்கேற்பப் பல பொருள்தரும். 'மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது' என்பதொன்றே அதற்குப் பொருளாக் கொள்வது புலமைக்குத் தகாது. 'இன்முகம்' 'இன்சொல்' இரண்டும், முகத்தவரது இனிமையும் சொல்பவரது இனிமையும் குறித்து முறையே முகத்திற்கும் சொல்லிற்கும் அடையாயின. அவ்வாறே சொல்வாரது வன்மையால் 'வன்சொல்'எனப்பட்டது. 'இன்சொலால் ஈரம் அளை இப்படிறிலவாம்' 'இன்சொலினதேயறம்' என்பவற்றிற்குப் பரிமேலழகர் உரைத்தவாறும் ஈண்டு அறியத்தக்கது.

(தொடரும்)

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 10-ன் தொடர்ச்சி]

செயக்கடவ அல்லனவும் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

தம்மால் செய்ய முடியாத செயலையும் செய்து முடித்து விடுவோம் என்பவர்களது நயப்பாடு பொருந்திய தாட்சணிய வார்த்தை என்ன பயனைத் தரும்? ஒருவரைக் கோபித்துக் கொடுஞ் சொற்களைச் சொன்னால் அவரது மனம் வருந்து மென்று கருதி அவரது தலையையே வெட்டி விடுபவனது கொடுஞ் செயலைப் போல இது ஆகும். அதனால் மறைக்காமல் அவரது முடியாமையைப் பலரறிய எடுத்துச் சொல்லி நீங்குதலே தக்கதாகும்.

The hollow complacency

What is the earthly use of the lovable courtesy of those, who vainly profess, at first to do many things which are really impossible for them? It is like the mercy of a man who cuts off his neighbour's head, lest harsh words should grieve his heart. 71

---

* Translated by: Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

அல்லன செய்யினும் ஆகுலம் கூழாக்கொண்(டு)
ஒல்லாதார் வாய்விட் டுலம்புப—வல்லார்
பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்தாங்(கு)
அறிமடம் பூண்டுநிற் பார்.

அடக்கம் இல்லாதவர்கள் அறமல்லாத மறச்செயல்களைச் செய்தார்களாயினும் ஆரவாரத்தையே பயனுகக் கொண்டு தம் செயல்களைப் பலரறிய வாய்விட்டுச் சொல்லி உளறுவார்கள். வன்மையை உடைய பெரியோர்கள், பிறிதொருவர் மற்ருெரு வருக்குச் செய்வது போலச் செய்யத் தக்கவைகளைச் செய்து முடித்து, அவற்றில் அறிந்தும் அறியாமையாகிய தாழ்வை மேற்கொண்டிருப்பார்கள்.

The ways of the unscrupulous

Unscrupulous men who are bent upon mere ostentation, indulge in boasting themselves aloud, even of their useless deeds. On the other hand, how few are those who, having done good and necessary deeds, assume a feigned ignorance born out of humility, as if some one else had done them. **72**

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போற்
கைவிதிர்த் தஞ்சப் படும்.

தனக்கு யாதொரு பகையும் இல்லாமலிருப்பவும் பலரது குற்றங்களை எடுத்து மீண்டும் மீண்டும் சொல்லி அதனுல் தனக்கு வரும் மகிழ்ச்சி ஒன்றையே நல்ல பயனுகக் கொள்ளும் மூடன், எந்தப் பயனும் தனக்கு இல்லையாயினும் உடல் துடிப் பதைக் காணும் பொருட்டாக வழிப்போக்கர்களது கன்னத்தை உடைத்து வருத்தும் இயல்புடைய கள்வனைப் போலப் பிறரால் கைந்நடுங்கி அஞ்சப்படுவான்.

Malice

He who dwells upon exposing the failings of others and scandalising them without any cause of enmity, but merely with a view to excite derisive laughter, is fit to be dreaded by all, like the highway robber who breaks the jaws of a person, without any benefit to himself, simply to see him tremble with pain. 73

தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்.

தாம் பெற்ற புதல்வர்களுக்குள் தம்மிடத்தில் அன்பு செய்யும் புதல்வர்களுக்கு மட்டுந்தான் பயன் ஆனவற்றைப் பலகாலும் தந்தையர் சொல்லுவர். அதுபோலக் கடவுள் உண்டென்று சொல்லுபவர்கள் தீச்செயல்களைச் செய்யப் புகுந்தார்களாயின், அக்கடவுளே முன்னின்று தாட்சணிய மில்லாது அவர்களைத் தண்டிக்கும். கடவுள் இல்லையென்று சொல்லுபவர்களிடத்தில் அது அவ்வாறு செய்வதில்லை.

The rebuke of God

When those who believe in God, begin to do evil, God will himself correct them by inflicting deterrent punishment, without any mercy; but it is not so with those who own no God. Is it not to one's own children good advice is always given? 74

தீய செயல்செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன ஆகாவாம் நாவின் புறம்நக்கிக்
கொல்லும் கவயமாப் போல்,

நாக்கினாலே இன்பம் உண்டாகும்படி நக்கிக் கொடுத்துப் பின்னர்க் கொல்லுகின்ற காட்டுப்பசுவைப்போல, முன்பு நல்லன போலத் தோன்றினாலும் தீய செயல்கள் என்றும் தீயனவே யாகுமன்றி வேறாகமாட்டா. தீய செயல் செய்வாரது செல்வம் பெருக்கமாகி வந்தாலும், தீமையால் வந்த அது நன்மையாக ஒரு போதும் ஆக மாட்டாது.

The wealth of the wicked

Even though the wealth of evil-doers may for a time grow, will still yield nothing but pain. What is bad, can never become good. Hence such wealth is like the wild cow that pleases by licking, but ultimately causes death. 75

———

(தொடரும்)

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

பதினோராந் திருமுறை

(பன்னிரு அருளாளர்கள் பாடிய நாற்பது நூல்கள் அடங்கியது.)

புதிய பதிப்பு

சுபகிருது வருடத் தைப்பூச வெளியீடு.

552 பக்கங்கள் கொண்டது. (32+506+14)

உயர்ந்த ரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

பிரதி ரூ. 1-50. தபால் கட்டணம் வேறு.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
பிள்ளையார் கோயில் தெரு: திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சுப்பிரமணியர் விருத்தம்

[மலர் 14. இதழ் 10-ன் தொடர்ச்சி]

தீராத மாயச் சுகந்தந்த இக்கடும்
சென்னம் செழித்தபின்பு
செகதல மயக்கம் அதிலேஎன் குடித்தனம்
தீயமருள் ஓர்வங்கணம்
போராடு சமுசார பாச பந்தமிதில்
போக மடவார் இணக்கம்
பொறிவாய் அலைக்கும் ஈதுள்ளபடி முன்வினைப்
போகம் தொடர்ந்த நெறியால்
ஆராலும் முடிவுருது ஆனுல் இதற்குநல்
அறிவென்ற தீபமொன்றுண்(டு)
அவ்வழியி லேமனம் செல்லாமல் அலைகின்ற
அடியேனை ஆட்கொள்ளுவாய்
தாரேறு பன்னிரு புயாசலக் கடவுளே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 9

தருகாம மோகமுறு திமிதிமிங் கிலமிக்க
தனலோப வனமுதலையாம்
தற்கோபம் அனல்வடவை மூடத்துவம் பரவி
சஞ்சலம் எனும்தரங்கம்
அரியவெளி ஒருகுமிழி அஞ்ஞான வாரிதியில்
அலைகின்ற சீவராசி
அத்தனையும் மீனினம் ஏமனொரு வீசுவலை
அவ்வுயிரில் யானுமொருவன்
கருதரிய பாரப் பெருங்கடல் கடந்தே
கடைத்தேற வேணுமென்ருல்
கைத்தவலை இல்லையினி என்செய்கு வேன்உனது
கால்தவலை கைப்பற்றினேன்
சரியமர்செய் நெடியபடை சூரகெச சிங்கமே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 10

தூயபொறி ஐந்தையும் அடக்கிப் புலாதிகள்
சுழல்கின்ற வழிமறித்துச்
சுழிமுனை திறந்த மூலாதார மேலாம்
துவாதசாந் தத்தை முட்டி
வாயுவை இறுக்கிப் பெலத்துவரு குண்டலியை
வவ்விமேற் கொண்டெடுத்து
வாசியை நடத்திஅவ் வோசையைத் தாவென்று
வழிகொண்டு நாதவெளியில்
தோயும் பரப்பிரம பூரண விலாசமது
சோதிப்ப தென்னவெளிதோ
தொலையாது நிலையாத தாகையால் உன்பதத்
துணையே துணைப்பற்றினேன்
தாயான மனோகர மயூரவா கனமுருக
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 11

கண்ணேறு வாராது பிணியொன்றும் சேராது
கவலைப் படாது நெஞ்சம்
கலியாது சலியாது நலியாது மெலியாது
கலியென்ற பேயடாது
விண்ணேறும் அணுகாது கன்மவினை தொடராது
விசமச் சுரம்வராது
வெய்ய பூதம்பில்லி வஞ்சனைகள் தொடரா
விடம்பரவு செந்தும்அடரா
எண்ணேறு சனனங்கள் கிடையாது காலபயம்
எள்ளவுமே இராதுஇவ்
ஏழைக் கிரங்கியருள் தெய்வம்உனை யல்லாமல்
இன்னமொரு தெய்வம்உளதோ
தண்ணேறு கங்கைமலை மங்கையருள் தங்கமே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 12

சுப்பிரமணியர் விருத்தம் முற்றும்.

நாலும் மூன்றும்

வித்துவான். திரு. க. வா. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்
சென்னை.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா".

இப்பாடல் ஔவையார் பாடியது. நல்வழியின் காப்புச் செய்யுளாக அமைந்தது. கரிமுகத்துத் தூமணியாகிய விநாயகரை நோக்கிப் பாலும் தெளிந்த தேனும் பாகும் பருப்பும் ஆகிய நான்கையும் கலந்து, உனக்குக் கொடுப்பேன்; நீ எனக்குப், பதிலாகச், சங்கத் தமிழ் மூன்றையும் தருக என வேண்டினர் ஔவையார். இவர் வேண்டுதலிற் சொற்பொருள் ஆற்றலைக் காண்பதே இச்சிறுகட்டுரையின் நோக்கம்.

நாலும் மூன்றும்

விநாயகரிடம் வேண்டுவன மூன்று. தாம் அவர்க்குத் தருவனவோ நான்கு. கடவுளுக்கு எல்லாம் எளிதில் இயலும். இயன்றாலும், அவர், நான்கு பெற்றுக் கொண்டு மூன்று அருளுவது மிக எளிது. ஔவையார் கொடுப்பன மிகை. தாம் கொள்வன குறை. தாம் தரும் பொருள்களைப் பாலும், தேனும், பாகும், பருப்பும் ஆகிய நான்கும் வெளிப்படையாக் கூறியவாறே தமக்கு வேண்டும் பொருள்களையும் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் வெளிப்படக் கூறாமல் சங்கத் தமிழ் மூன்றும் எனத் தொகையாற் கூறினர்.

அந்நான்கு பொருள்களும் நான்கு நிலங்களில் விளைவன. பால் முல்லை நிலத்துக்குரியது. தேன் குறிஞ்சி நிலத்துக்குரி

யது. பாகு மருத நிலத்துக்குரியது. பருப்பு எல்லா நிலங்களுக்கும் உரியதாயினும் இங்கு நெய்தலுக்குரிய தாக்கிக் கொள்ள வேண்டும். நெய்தல் நிலக்கருப் பொருள்களுள் ஒன்றும் உணவு பற்றி எழுதும் ஆசிரியர்கள் உப்பு விலையும், மீன் விலையும் என்றெழுதுவர். அந்நிலையில் உப்பு, மீன் இவற்றை விற்றுக் கொண்ட பருப்பு எனக் கொண்டு நெய்தல் நிலத்துக்குரிய தாக்கிக் கொள்ளலாம். சங்கத் தமிழும் நான்கு நிலங்களுக்கு முரியதே. குறிஞ்சி முதலிய நான்கு நிலங்களுக்கு உரிய மூன்று தமிழையும் பெற நான்கு நிலப்பொருள்களையும் தருவேன் என்றார்.

பாலும் பாகும் சுவையுடையன. தேன் களிப்புத்தருவது. பருப்புப் பசிக்கு உணவாக இருப்பது. இவை நாலும் கலந்துண்டால் பசி நீங்குவதுடன் நாவிற்குச் சுவையும் மனத்துக்கு மகிழ்ச்சியும் உண்டாகும். இயற்றமிழ், புலவர்க்குப் பசியைப் போக்குவது. இசைத் தமிழ் இசையுணர்வார்க்குச் சுவை தருவது நாடகத் தமிழ் தன்னை மறந்து உணர்ச்சி வயப்பட்டு ஆடச் செய்வது. காண்பார்க்கும் கற்பார்க்கும் களிப்பூட்டி மெய்ப் பாட்டை விளைப்பது.

நாலும் என்றதில் உள்ள முற்றும்மையை எச்சவும்மையாகக் கொண்டு நான்குக்கு மேலும் தருவேன் என்றதாகவும் கொள்ளலாம். அவை பால் என்ற அளவில் முல்லை நிலப் பொருள்கள் பலவும், தேன் என்ற அளவில் பிற குறிஞ்சி நிலப் பொருள்களும், பாகு என்ற அளவில் பிற மருத நிலப் பொருள்களும், பருப்பு என்ற அளவில் நெய்தல் நிலத்துக் கொள்ளும் பிற நல்ல மணி முதலிய பொருள்களும் ஆம். தாம் கொடுப்பன நான்கும் அவற்றுக்கு மேலும் ஆக இருப்பினும் இறைவன் கொடுக்க வேண்டுவன மூன்றேயன்றிப் பிறிதொன்றும் இல்லை என்பார் சங்கத் தமிழ் மூன்றும் என முற்றும்மையிற் கூறினர்.

கலந்து கொடுத்தல்

இவை நாலும் தருவேன் என்னுமல் கலந்து தருவேன் என்றார். ஆனல் மூன்றையும் கலந்து தா என்று சொல்லவில்லை

கலத்தலாகிய தொழில் முயற்சி தன்பால் இருப்பதாகவும் விநாயகர்க்கு முயற்சியின்றி எளிதில் இயலக் கூடியதாகவும் குறித்தார்.

விநாயகர் நான்கு கலந்த உருவினர். விலங்கு முகம், மனித வயிறு, பூதக்கால், தெய்வத்தன்மை, ஆகிய நான்கும் கலந்த உருவுடையார். யானை முகத்தார் ஆதலின் விலங்குரு வினர். வயிற்றுப்பாகம் மனித வுருவைக்காட்டும். வயிற்றின் கீழ்ப்பாகம் குறட் பூத உருவைக்காட்டும் தும்பிக்கையன்றி மற்றைய நான்கு கைகளும் தெய்வத் தன்மையைக் காட்டும். கலந்த உருவினர்க்குக் கலந்து கொடுத்தல் தக்கதே.

நாலும் கலந்த உணவு மிகச் சிறக்கும். தமிழ் மூன்றும் அறிந்தால் தான் முழுத் தமிழின்பம் அறிந்ததாகும். இல்லையேல் குறைதான். நாலும் கலந்து கொடுப்பதால் மூன் றும் கலந்தே கொடுத்தல் வேண்டும். இயல், இசை, கூத்து, மூன்றும் ஒரு சேரக் கலத்தல் வேண்டும். அவற்றின் கலப்பால் வரும் இனிமை தனிமையால் விளையாது.

உனக்கு எனக்கு

உனக்குத் தருவேன்; எனக்குத் தா என்றார். ஒருவர்க்கொரு வர் கொடுத்துக் கொள்வதில் பயன் என்ன? விநாயகருக்குத் தாம் தருவதாகவும் தமக்கு விநாயகர் தரவேண்டும் என்ப தாகவும் கூறியிருந்தாலும், எல்லாக் கடவுளர்க்கும் தருவ தாகவும் எல்லா மக்களுக்கும் தரவேண்டியதாகவும் கொள்ள வேண்டும். விநாயகர் கடவுள். அவர் கொண்டது கடவுளின் பலவுருவங்களுள் ஓர் உருவம். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல கடவுள் விநாயகரானார். ஆகவே விநாயகருக்குக் கொடுக்கும் நாலும் எல்லாக் கடவுளர்க்கும் கொடுத்தன ஆகும். அதுபோல ஔவையார்க்குக் கொடுக்கும் தமிழ் எல்லார்க்கும் கொடுப்பதாக ஆகும். அவர் வாயிலாக எல்லா மக்களும் அச் சங்கத் தமிழை அறிவார்கள். இன்று நாம் அறிந்து வருகின்றோ மல்லமோ? அதனால் ‘உனக்கு’ ‘எனக்கு’ என்பன தந்நலம் மட்டும் கருதிக் கூறியனவல்ல.

இருவரிடத்தும் கொடுத்தற்குப் பொருள்கள் இருக்கின்றன. இருவரும் ஒருவர்க்கொருவர் கொடுத்துக் கொள்வதற்குரியவர். இருவரும் ஒத்த தகுதியில் இருப்பவர். அதனால் தமிழ் மூன்றும் 'ஈ' என்றோ 'கொடு' என்றோ சொல்லாமல் 'தா' என்று சொன்னார். இழிந்தோன் உயர்ந்தோனை வேண்டும்போது 'ஈ' என இரத்தல் வேண்டும். உயர்ந்தோன் இழிந்தோனை ஏவும் போது 'கொடு' என விதித்தல் வேண்டும். தன்னோடு ஒத்தவனைக் கேட்கும்போது தா எனக் கூறுதல் வேண்டும். இவ்வுலகியலைத் தமிழிலக்கணமும் இப்படிச் சொல்கிறது. ஔவையார் சிவ ஞானத்தினால் ஒத்த நிலையில் அபேதமாக வைத்துப் பேசுகிறார் 'தா' என்று.

பயன்

இப்படி ஒருவர்க்கொருவர் கொடுத்துக் கொள்வதால் பயன் என்ன? சிறந்த பயனைப் பெறுபவர் யார்? மாணிக்கவாசகர் சிவ பிரானிடம் நமக்குள் யார் சதுரர்? எனக் கேட்டார். இருவரும் ஒருவரை ஒருவர்க்குக் கொடுத்துக் கொண்டதில் ஒத்திருந்தாலும், அதனால் தாம் பெற்ற முடிந்த பயனை நோக்கிச் சதுரப்பாடுடையவன் யானே' என்று கூறியருளினார்.

'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்'

(திருவாசகம், கோயில் திருப்பதிகம் 10)

மாணிக்க வாசகர் போல விநாயகருக்கு நாலு கொடுத்து அவரிடமிருந்து மூன்று பெறுவாரானால் ஔவையார் சதுரப்பாடு உடையவரா? ஆம்.

பால்முதலிய உணவுப் பொருள்கள் உடலை வளர்ப்பன. அறிவை வளர்ப்பன அல்ல. அறிவு தெளிவுறுதற்குத் தேன் காரணம் ஆகலாமே தவிர வளர்தற்குக் காரணம் ஆகாது. இவ்வுணவுப் பொருள்கள் இறைவனுக்குத் தேவையற்றன. ஐம்பூதங்களால் ஆன உடம்பு இல்லை அவர்க்கு. மனித உடம்பே ஐம் பூதங்களால் ஆனது. பஞ்ச பூத பரிணாமம் (நிலை மாறுதல்)

என்றே நம் உடம்புக்குப் பெயர் உண்டு. இறைவன் நினைத்த மாத்திரத்தில் நினைத்த வுருவை எடுப்பவர்.

"குறித்தொன் றாக மாட்டாக் குறைவில னாத லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுத லிலாமை யானு
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மல னருளி னாலே."

(சித்தியார்-சுபக்கம்-பாடல் 45)

என்றருளினார் அருணந்தி தேவ நாயனார் அவர்கள். அவருக்கு உணவால் உடம்பு வளர வேண்டுவதில்லை. அதனால் அவர்க்குத் தரும் நாலும் அவர்க்குப் பயனற்றன. ஆகவே விநாயகர் நாலும் பெற்றுப் பயனடைபவர் அல்லர்.

தமிழ் அறிவை வளர்ப்பது. அறிவு இறைவனையடையச் செய்யும். செய்யவே தமிழ் வீடு பேறளிக்கும். கடவுள் தமிழ் மயமாகவே இருப்பவர். 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' என்று இறைவனைக் குறித்தருளினார் அப்பர். அவரே 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்றும் கூறி யருளினார். கூறவே இறைவன் இசைவடிவினன் என்னலாம். நடராசமூர்த்தி தாம் முத்தமிழுள் ஒன்றான கூத்துருவினன் இறைவன் என்பதைக் குறிக்கும். சிவபிரான் வேறு, விநாயகர் வேறல்லர். சிவனே விநாயகர். விநாயகர் உருவங்களுள் நடன விநாயகர் உருவும் உண்டு. நடன விநாயகர் என்று பெயரிட்டழைப்பர். அழைக்கவே தமிழ் வடிவான விநாயகரிடம் தமிழ் மூன்றும் தா என்றாலும் தமிழ் மூன்று மட்டுமன்றி நின்னையே எனக்குத் தா என்பதும் கருத்துப் பொருள் ஆகும். ஆகவே விநாயகர் தரும் தமிழால் வீடு பேறடையும் பயன் ஔவையார்க்குண்டு. அதனால் மணிவாசகரைப் போல ஔவையாரும் சதுரப்பாடு உடையவர் என்னலாம்.

முடிவு

இது காறும் கூறியவற்றால் நாலு கொடுத்து மூன்று கேட்டுப் பெரும் பயனையும் வீட்டினையும் அடையப் பாடிய ஔவையாரின் பாத்திறம் இனிது விளங்கும்.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

4

The Supreme God-head, the peer-less master of all is also the sincere companion of the Souls. We know from Tevaram songs such companionship granted by God is fully enjoyed to its utmost extent by St. Sundarar in his life. Our poet-saint Thayumanar's heart fills with joy when he ponders over such intimate relationship with God. The following couplet is just to explain the stricking feature of those who will be longing to seek the eternal friendship of the Lord.

ஓடும் இருநிதியும் ஒன்ருகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே!

(பொ–உரை) மட்பாண்டியின் உடைந்த சிதறல்களேயாயினும், மதிப்பிடற்கரிய செல்வத்தின் குவியலேயாயினும் விருப்பு வெறுப்பின்றிக் காண்போர் விரும்பிப் போற்றும் நட்பாக நீ விளங்குகின்ருய்.

Oh.........Lord Supreme! you are the lovable companion only of those genuine aspirants who have no likes and dislikes of all, as equally unconcerned with a heap of precious wealth as with a broken piece of an earthen-ware.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

திருவருட் பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 14. இதழ் 10-இன் தொடர்ச்சி)

26. "பன்மொழிகள் என்?உணரும் பான்மை தெரியாத
தன்மைஇரு ளார்தந் தது."

(தெ—ரை) பல சொல்லக் காமுறுவானேன்? உயிர், தன்னையும் தன் தலைவனையும் தன்னைத் தளைந்து நிற்கும் தளையையும் அறிய முடியாத தன்மையை இவ்வாணவ மலமே தந்ததாம்.

உயிர்கட்கு அறியாமை ஆணவ மலத்தால் வந்தது என்பது இதன் கருத்தாகும். 'அஞ்ஞானம் காட்டும் ஆணவமும்' என்றார் மெய்கண்டாரும். அஃறிணையாகிய இருளினை இருளார் என உயர்திணையாக்கிக் கூறியது அதனது இழிதகைமை நோக்கியேயாம்.

27. "இருள்இன்றேல் துன்(பு)ஏன்?உயிர் இயல்பேல் போக்கும்
பொருள்உண்டேல் ஒன்றாகப் போம்."

(தெ—ரை) ஆணவம் என்பதொன்றில்லை யாயின் உயிர்களுக்குத் துன்பம் எப்படி உண்டாகும். உண்டாகாது. உயிர்களுக்குத் துன்பம் உண்டென்பது நன்கு தெரிதலின் அதற்குக் காரணமாய ஆணவமலம் உண்டென்பதும் நன்கு தெரியலாம். உயிர்கட்கு அவ்வாணவ மலம் இயல்பாகிய குணமாயின் அவ்வாணவ மலம் கெடுங்கால் அவ்வுயிரும் உடன் கெடவேண்டும். ஆனால் உயிரோ அழியாப் பொருளாகும். ஆதலின் ஆணவ மலம் உயிர்கட்குக் குற்றமே யன்றிக் குணம் அன்றென்பதும் பெற்றாம்.

உயிர்கள் அடையும் இன்ப துன்பத்திற்குக் காரணம் ஆணவ மலமே என்பதும், அவ்வாணவ மலந்தானும் உயிர் கட்குக் குற்றம் என்பதும், இதனுல் பெற்ரும். தன்னைத் தான் நன்கு மதித்தலும், தான் வேண்டுமொன்றை நினைத்தலும், அதனைப் பெற வேண்டுமென்னும் ஆசையும், அதனைப் பெருமையால் வரும் சினமும், தன்னைத்தான் பெரிதாக மதிக்கும் செருக்கும், பிறவுயிர்களைக் கொல்லுதலும், தான் துன்புறுதலும் தான் விரும்பியது சிறிதே யாயினும் அதனைப் பெற்றவழிப் பெருமகிழ்வு எய்துதலும் உளவாக்குவது ஆணவ மலமேயாகும்.

28. "ஆ(சு)ஆதி யேல்அணவ காரணம்என்? முத்திநிலை
பேசா(து) அகவும் பிணி."

(தெ–ரை) ஆணவமானது உயிரை இடையில் சேர்ந்ததா யின், அங்ஙனம் அது இடையில் சேர்தற்குக் காரணம் என்னை யென வினவப்படும். அவ்வினுவிற்கு விடையின்று. அன்றியும், முன் உயிரினை யாதொரு காரணமுமின்றி அவ்வாணவ மலம் சேர்ந்தாற் போல, முத்திநிலையிலும் அது உயிரைப் பற்றுதல் கூடும் என்னும் கருத்தும் வந்துவிடும். ஆனுல் முத்திநிலையிலோ ஆணவம் தன் தன்மை கெட்டு நிற்றல் இயற்கையாகும். ஆதலின் ஆணவ மலம் உயிர்க்கு அனுதியாகவே உள்ளது என்பதும் அது முத்திநிலையில் வறுத்த வித்துப்போல தன் தன்மை கெட்டு நிற்கும் என்பதும் இதன் கருத்தாகும்.

ஆசு-ஆணவம். ஆதி-காலத்தால் வரையறுக்கப்படுவது. அனுதி-ஆதியில்லாதது. உயிர்களுக்கு ஆணவ மலம் அனுதி யாகவே உள்ளது என்பது இக்குறட்பாவின் கருத்தாகும். இங்ஙனம் உயிர்க்கு ஆணவமலம் அனுதியாகவே உளதாதற்குக் காரணம் கூறுவதற்கியலாது. நெல்லிற்கு உமியும், செம்பிற்குக் களிம்பும் அவ்வப் பொருள்களுடன் தொன்மையே உளவாதல் போல இவ்வாணவ மலமும் உயிர்கட்கு அனுதியாகவே உளது என்பதல்லது வேறு காரணம் கூறுதற்கில்லை. இதனை,

"நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி

மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்."

என்னும் சிவஞானப்போதப் பாடலால் நன்கு அறியலாம்.

29. "ஒன்று மிகினும் ஒளிகவரா தேல்உள்ளம்
என்றும் அகலா(து) இருள்."

(தெ–ரை) உலகில் இருள் மேலிட்டபோது ஒளி கொண்டு அதனை நீக்க இயலும். அவ்வொளியானும் இருள் நீங்காதாயின் அவ்விருளை என்றுமே நீக்க இயலாதாகும். அதுபோல உயிருக்கு ஆணவ இருளை நீக்க உடம்பு முதலிய கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அக்கருவிகள் இருக்கின்ற பொழுதும் ஆணவத்தினின்றும் நீங்கும் அறிவைப் பெறுதாயின் என்றுமே அவ்விருளை நீக்க இயலாது என்பதாம்.

எனவே உயிர்கட்கு இறைவன் உடல், கருவி கரணங்களைக் கொடுத்திருப்பது ஆணவ மலத்தினின்றும் நீங்கி உய்தி பெறுவதற்கேயாம் என்பது இதன் கருத்தாகும்.

30. "விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து."

(தெ–ரை) மாயையினால் ஆகிய தனு, கரண புவன போகங்கள் உயிர்களின் புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு கிடைக்கின்றன. அவை, விடியுமளவும் இருளை நீக்குதற்கு விளக்கு ஒரு கருவியாதல் போல உயிர் இறையாகிய பேரொளியைப் பெறுமளவும், ஆணவ இருளை நீக்குவதற்கு ஒருவாறு கருவி யாகின்றன என்பதாம்.

தனு-உடம்பு. கரணம்-மெய், வாய் முதலிய புறக்கருவிகளும், மனம் முதலிய அகக்கருவிகளும் ஆம். புவனம்-வசிக்கும் உலகம். போகம்-நுகர்தற்குரிய பொருள்கள்.

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Then St. Tirunavukkarasu led the life of a devotee. He sang in praise of Siva and began removing the thorns and weeds that grew on the temple precincts. And Tilakavatiyar was very happy that her brother had been reclaimed.

The jains at Pataliputra were angry with this desertion of Dharmasena. They were afraid that this event might blow off their religion. So they approached the then Pallava King, Mahendra Varman and persuaded him to punish Dharmasena, now Tirunavukkarasu. Accordingly the King sent his men to bring St. Tirunavukkarasu. When they went and conveyed the King's orders, St. Tirunavukkarasu said he was no slave or subject to the King. But the courtiers implored him to go with them lest they should be punished. St. Tirunavukkarasu complied with their request.

பொது திருத்தாண்டகம் 6.ஆம் திருமுறை

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்
நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம் இன்பமே
எந்நாளும் துன்பமில்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரன்நற் சங்கவெண்
குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சே
வடியிணையே குறுகி னோமே.

"We are not the subjects of any, nor do we fear Death or Hell. We have no grief. Pain or disease we know not; never do we submit. Joy for ever and no worry, for we are at Sankara's feet as His slave, who wears the conch-shell as ear-drops and who is nobody's servant."

The Pallava King ordered that St. Tirunavukkarasu should be put in a lime kiln. And it was carried out. The saint was in no way affected. He came out alive after spending seven days in the kiln. All the time he was singing the beauty of the Lord's Feet which gave a fine shelter.

பொது | தனித்திருக்குறுந்தொகை | 5ஆம் திருமுறை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

"My Lord's feet gave me a shelter and they were like the soothing sound of a veena, the moon light of the evening, the soft south-wind, the heat of the spring and the pool full of flowers with the bees hovering around."

(தொடரும்)

பாம்புர நன்னகரார்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.

சோழ நாட்டிலே காவிரியின் தென்கரைத் தலங்கள் நூற்றிருபத்தேழனுள், ஐம்பத்தொன்பதாவது தலமாக விளங்குவது 'திருப்பாம்புரம்' என்னும் திருத்தலம்.

ஆக்கூரில் ஆயிரத் தொருவரை வணங்கி, பதிகம்பாடி இடையில் பல தலங்கள் வழிபட்டு 'அறப்பெரும்பயன்' அனைய தொண்டரோடு 'மியச்சூர்' தொழுது, பின்னர் 'பாரிடம் பரவ நின்ருடுவார்' பாதங்காணப் பாம்புரநகர் சேர்கின்ருர் திருஞான சம்பந்தர்.

"பாம்புரத் துறை பரமனுரைப் பணிந்து நற்பதிக
இன்னிசை பாடினுர்."

என்கிருர் சேக்கிழார் பெருமான்.

முதல் திருமுறையும், தக்கராகப்பண்ணும் ஆகிய 'சீரணி திகழ்' என்ற பதிகம் ஒன்றேதான் பாம்புரம் அமர்ந்த பரமருக்கு இன்று உள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் பாடியது அது.

அருவம் மனத்தால் தியானிக்கப்படுவது; கண்ணுல் காண முடியாது. நாம் பூசித்துப் பயன்கொள்ள வேண்டி இறைவன் கொள்ளும் திருவுருவங்கள் பல இருப்பினும் சிவலிங்கமே சிறப்பானதாகும். 'அருவுருவம்' ஆகிய சிவலிங்கமே அடியவர்களாக்கும் பெருமையை—சிறப்பையுடையது. சிவலிங்கத் திருமேனியில் 'உருவம் உண்டு, உருவம் இல்லை' என்ற இரண்டு தன்மை உண்டு ஆதலால் 'அருவுருவம்' எனநின்றது.

"காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்."

என்று சாக்கியனுர் புராணத்திலே சேக்கிழார் குறிப்பிடுகின்ருர்.

சிவந்த கண்களையுடைய திருமாலும், நான்கு முகங்களை உடைய பிரம்மாவும் தங்களுக்குள் செருக்குற்றுக் கீழும் மேலு மாகத் தேடித் திரிவாராயினர்; இறைவன் அடிமுடிகளைத் தேடிக் காணமாட்டதவர்கள் இருவரும் அயர்ந்தனர்.

"ஈத்துவக்கும் இன்பன்'—இறைவன். அவர்கட்கு அருளும் பொருட்டு 'இங்குற்றேன்—இவ்விடத்துள்ளேன்' எனக்கூறி இலிங்கத்தினின்று வெளிப்பட்டு மிக்க செஞ்சடையோடு கூடிய புண்ணிய வடிவினனாய்த் தோன்றி யருள் செய்தான்.

இதை,

"செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித்திரிந்தவர், காண்கிலார்;
'இங்குற்றேன்' என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே."

என்று அப்பரடிகள் பாடுகின்றார்.

"கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட, வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி."

என்னும் சிவபுராணப் பகுதி-மணிவாசகப் பொன்மொழி இங்கு எண்ணி மகிழ வேண்டிய நேரம், இடம், ஆம்!

'நுதல் கண்ணன்-கண்ணுதலான்' முன்பின் மாறிவரும். கண்ணுதல்-('கண்ணுதல் உடையதோர் களிற்றுமாமுகப் பண்ணவன்' என்பர் கச்சியப்பர்.) எண்ணுதல், எண்ணத் தாலேயே யாவும் படைத்தருளுகின்ற சிவன்!-எப்பொருளையும்-எச்சக்திகளையும்-எவ்வுயிர்களையும் ஆளுந்தன்மைக்கே தலைமை யாம் 'ஈசன்' என்னும் பெயர் தாங்கி நிற்கின்றான்.

அந்த ஈசனை,

"தானே புணர்ந்து தானே அறிந்து
தானே மகிழ்ந்து அருளூறித்
தாய்போல் பரிந்த தேனொடுகந்து
தானே தழைந்து 'சிவமாகி'த்
தானே வளர்ந்து தானே இருந்த
தார் வேணி எந்தை...."

என்று சந்தமிகுந்திருப்புகழில் அருணகிரி நாதர், சிவமாந் தன்மையை வியந்து நயந்து பாடுகின்றார்.

அவனை,

"ஏகன் அநேகன்" என்பார் மணிவாசகர்.

எண்ணிலாத சமயங்கள், எண்ணிய உருவில் அவனை ஓருருவில்–பல உருவில், வைத்து வழிபடுகின்றன. எண்ணிய உருவில், எண்ணியவை நல்க 'அவன்' என்னும் ஈசன் அருள் வழங்கப் பல்வேறு உருவங்கள் தாங்குகின்றான்.

அப்படி அவன் தாங்கிவரும் திருமேனி அவனது 'ஏக சொருபத்திலிருந்தே துவங்குகின்றது.

"அரிதரு கண்ணியாளை ஒருபாக மாக
அருள் காரணத்தில் வருவார்."

என்பது அப்பரடிகளின் அருள் அநுபவம். சைவசமயத்தின் வழி அநுபவமும் அதுவே.

உருத்திர நிலையில் வெம்மையும், சிவமானபோது தண்மையும் வெம்மையில் மறக்கருணையும், தண்மையில் அறக்கருணையும் நிகழ்த்துகின்றான் அந்த ஈசன்.

போக வடிவம், யோக வடிவம், கோர வடிவம் ஆகிய மூன்று வடிவங்கள் சிவபெருமானுக்கு. அம்மையோடு கூடிய அப்பராய் இருக்கும் வடிவம் போக வடிவம்; அம்பு, வில், முதலிய ஆயுதங்களைத் தாங்கியிருக்கும் வடிவம் கோர வடிவம்; ஆலின் கீழ் இருந்து அறம் விளக்கும் கோலம் (தட்சிணாமூர்த்தி வடிவம்) யோக வடிவம்.

இறைவன் நிகழ்த்திய வீரச்செயல்களை அட்ட வீரட்டம் முதலியவற்றில் காண்கிறோம்–படிக்கிறோம். அந்த இறைவன் அருள்செய்த வரலாறும் பல!

செவ்வையாக இருக்கும் அவனது சங்காரச் செயல். தெளிந்துதேற இருந்தானை–அன்புருவாம் பரசிவனைப் பாம்புர நகரில் கண்ட ஞானசம்பந்தர் பாடுகின்றார்.

" மாலினுக்கன்று சக்கரமீந்து
மலரவர்க் கொருமுகம்ஒழித்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி
அனலது வாடும்எம்அடிகள்
காலனைக்காய்ந்து தங்கழலடியால்
காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தஎம்அடிகள்
பாம்புர நன்னகராரே." — 'சீரணிதிகழ்'

என்று துவங்கும் பண்ணில் ஏழாவது பாடல் இது.

மாலினுக்கு (திருமாலுக்கு) சக்கரம் ஈந்தவர் வீழிநாதர் – திருவீழிமிழலை நிகழ்ச்சி.

மலரவர்க்கு (பிரம்மாவுக்கு) ஒருமுகம் ஒழித்தவர் வீரட்டானேசுரர்–கண்டியூரில் நிகழ்த்திய வீரம்.

ஆலின்கீழ் அறம் அருளியவர் கல்லாலப் பெருமான். (தட்சிணாமூர்த்தி) தர்மோபதேசம் பெற்றவர்கள்; சனகர், சனந்தனர், சனுதனர், சனற்குமாரர் என்னும் நால்வர்.

அனலேந்தியாடுபவர், ஐந்தொழில் புரியும் அம்பலவாணர்.

அவர் இயற்றும் ஐந்தொழிலை, சிருட்டி - திதி - சம்காரம் - திரோபவம்-அனுக்கிரகம் என்பது வடநூல் வழக்கு.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பது தமிழ் வழக்கு.

" தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்;—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதி ரோதம்;முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு".

என்பது 'மனவாசகம்' கடந்தாரின் அருள்மொழி வழக்கு.

நடராசரின் வலக்கையில் தமருகம் என்ற உடுக்கையுள்ளது; அது ஒலியை உண்டாக்குகின்றது, அவ்வொலியே உலகப்படைப்புக்கு காரணமாகும். இடக்கரத்தில் அனல் உண்டு, அதுவே சங்கார நிலையைத் தோற்றி வைக்கிறது.

"கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரியகலும்"

என்று ஆனந்த நடமிடும் அம்பலக் கூத்தனை வாயாரப்புகழ்ந்து பாடுவார் வன்றொண்டர். தூக்கிய இருகரங்களை மட்டுமே இங்கு பேசினேம்; அனல் ஏந்தியாடும் அடிகளை நினைவுபடுத்தி.

"ஓதத்து ஒலிமடங்கி ஊருண்டேறி
ஒத்துலகம் எல்லாம் ஒடுங்கியபின்
வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்தனாரே"

என்ற அப்பர் வாக்கு சிந்திக்கற் பாலது. காலனைக் காய்ந்தது கடவூர் நிகழ்ச்சி.

மார்க்கண்டனைக் காக்கக் காலனைக் காய்ந்தான் கடவூர்ப் பெருமான்; அடியார்க்கு எளிவந்த பிரானும் அவனே, அன்பொழுகக் 'காலனைக் காய்ந்தபிரான் 'கடவூர் உறை உத்தமன்' என்பார் நாவரசப் பெருமான்.

காமனைப் பொடிபட நோக்கியவர் குறுக்கை வீரட்டனார். சிவபெருமான் உமையை மணக்க வேண்டுமென்று கழுநீர் மலர் அம்பு எய்தவன் காமன்.

"........உமைக்காக வேளைப்புகக்
கழுநீரால் காதும் காமவேள்"

என்பார் முருகவேளின் அருள்பெறு அருணகிரியார்.

"தென்றல் நெடுந்தே ரோனைப்
பொன்றக் கொண்டார்"

என்பார் நாவரசர்.

காமனது தேர், தென்றல்; அவனக்கு எக்காளம், குயில்; குடை, சந்திரன்; கடலே பேரிகை; அவனது பஞ்சபாணங்கள், தாமரை-அசோகு-மா-முல்லை-நீலோத்பலம் ஆகியன.

பாலனுக்கு அருள் செய்தது, உபமன்யு முனிவருக்குப்பாற் கடல் ஈந்த கருணையாகும்.

"பாலகனுர்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச்சடை யார்"

என்று பாடுகின்ருர், மணிவாசகர்.

"பாலனுக்காயன்று பாற்கடலீந்து" என்று பாடுகின்ருர் நாவரசர்.

"பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" என்று நட்டம் பயிலவல்லானுக்குப் பல்லாண்டிசைப் பார் சேந்தனுர்.

"தம்முடைய மாமனுராகிய வசிட்டர் ஆசிரமத்திலே இளமைக் காலத்தில் இருக்கும்போது காமதேனுவின் இனிய பாலே உண்டு வந்தார் உபமன்யு முனிவர். பின்னர், அவரின் தந்தையார் புலிக்கால் முனிவர் (வியாக்ரபாதர்) ஆசிரமத்தில் வாழும்போது அரைத்துக் கரைத்த அரிமாப்பாலேயே உண்ண நேர்ந்தது. பாலகன் ஆகிய உபமன்யு அதை வெறுத்து உண்ணு மல் அழத் தொடங்கிவிட்டார். அழுகையைக் காணக் கேட்க ஆற்ருத நிலேயிலே அவரது தாய்,

"மகனே! நீ சிவபெருமானேப் பூசிப்பாயானுல் உனக்கு வேண்டிய இனிய பாலே நீ பெறலாம்." என்ருள்.

அதைக் கேட்ட உபமன்யு, தன்னுடைய பசியையும் மறந்து தவமேற் கொண்டார்; சிவ பூசனே செய்தார்; இறைவன் தோன்றினன்; அவர் உண்டு மகிழ்ந்து பசிதீர அருள்புரிந்து "திருப்பாற் கடலே அளித்தான்."என விளக்கும் இலிங்க புராணம் சிவரகசியம் ஆகிய நூல்கள்.

எவ்வுயிர்க்கும் தான் ஓர் இலக்கணமாக நிற்கின்ற இறைவன்-சிவன், 'ஈசன்' எனப்பட்டான். ஈத்துவக்கும் இன்பமும், துன்பமும் அவனருளே.

"நன்றே செய்வாய், பிழைசெய்வாய்" என்பார் மணிவாசகர். அன்புருவான பரசிவத்தை அறக்கடவுளாக – மறக் கருணேயின் பொலிவாகப் பாம்புர நன்னகரில் பாடுகின்ருர் ஞானசம்பந்தர்.

“ அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.”

என்று கூறுகின்றார் குறளாசிரியர் வள்ளுவர்.

அரன் நாமமே சூழ்ந்து அவனியிலே மின்னிடும் துயர கன்று இன்பமே நிலவ அரனடியே சிந்திக்கும் அருளாளர் ஞானசம்பந்தப்பெருமான்.

பாம்புர நன்னகரமர்ந்த பரமனை, அறக்கருணை பாலித் தருளும் ஞானமூர்த்தியாக–மறக்கருணை பாலித்தருளும் வேக மூர்த்தியாக நமக்கு விளக்குகின்றார்.

“உலகமே அவன் அருளின் தோன்றும்; அவன் வெகுளின் அழியும். உயிரானது, உடலைத் தொழிற் படுத்துகின்றது, அந்த உயிரை இயக்குபவன் இறைவன்.”— இந்த உண்மையை உல கெலாம் அறியப் பாமாலை சூட்டி மகிழ்ந்தவர் ஞானசம்பந்தர்.

‘சீரணிதிகழ்’ என்ற சம்பந்தப்பெருமானின் திருப்பதிகம் பெற்றத்தலம் ‘திருப்பாம்புரம்;’ அதனை ஏற்றுக்கொண்ட பரமர் ‘பாம்புரேச்சுரர்.’ அவர் இடமாக வைத்துள்ள அம்மை ‘வண்டார் பூங்குழலி.’

மாயவரமிருந்து திருஆரூர் செல்லும் வழியில் பேரளம்; புகைவண்டி நிலையம்-சந்திப்பையுடையது. இங்கிருந்து மேற்குத் திசையில் 5 கற்றொலைவில் உள்ளது திருப்பாம்புரம். ஆதி சேடனார் வழிபாடு செய்ததலம்; வன்னி தலவிருட்சம்; ஆதி சேட தீர்த்தம். ஆதிசேடனாரின் மூலத்தானம் உள்ளது; செப்பு விக்ரகமும் உடையது.

“ பார்மலிந்தோங்கிப் பருமதில்சூழ்ந்த
பாம்புர நன்னகராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ்மாடக்
கழுமல முதுபதிக்கவுணி
நார்மலிந்தோங்கு நான்மறைஞான
சம்பந்தன் செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமதோங்கிச்
சிவனடி நண்ணுவர்தாமே.” (திருஞானசம்பந்தர்.)

கடிதப்பா

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்,
கல்யாண நகர், சென்னை-28.

நத்தும் தமிழும் சைவமும்நன்
றுட்ட மெனவே வளர்க்கும்அறச்
சொத்தை யுடைய திருப்பனைசைக்
காசி மடத்தின் தொல்புகழை
எத்திக் கும்செல் லும்படியா
இயற்றும் இளைய பெருந்தலைவன்
முத்துக் குமார சாமியெனும்
முனிவற் கென்றன் வணக்கங்கள். (1)

மேலும் மேலும் பலஅறங்கள்
விரும்பிச் செய்து காலத்தைக்
கோலும் பணியால் அளவெடுக்கும்
கொள்கை கொண்டோன், பனசையினில்
சாலும் காசி வாசியெனும்
சாமி ஞான அருணந்தி
நூலும் உரையும் வளர்வதற்கா
நுணித்துச் செய்தான் பலபணிகள். (2)

குமர கோட்டப் பெருமானைக்
கொண்ட பெரிய அன்பினொடும்
அமையப் பூசை செய்துயர்ந்த
ஐயன் புலவன் கச்சியப்பன்
சமையும் சுவைகள் மிகக்கவினத்
தமிழிற் கந்த புராணத்தை
இமையம் என்ன இலங்கும்வகை
இயற்றித் தந்தே நலம்செய்தான். (3)

அன்ன பெருநூல் தனை அந்த
ஆல யத்தில் கார்த்திகையில்
நன்னர் விளக்க உரையாற்றி
நயம்சொல் கின்ற புலவருக்குப்
பொன்னும் புகழும் வரும்படியாப்
பொற்பின் அமைத்த அருணந்திக்
கென்னிவ் வுலகம் கைம்மாரு
இயற்ற வல்ல தெனஓர்ந்தேன். (4)

சுடர்சேர் விளக்கம் பலவைத்தான்
தூய தேவா ரப்பதிகம்
அடல்சேர் கல்லில் எழுதிவைத்தான்
அன்ன தானம் நடத்துவித்தான்
கடல்போற் கருணைப் பரமேசன்
காசி வாழ்வே மனம்கொண்டான்
இடர்சே ராத திருமனத்தான்
இசையிற் சிறந்த அருணந்தி. (5)

திங்கள் ஒன்றுக் கொருதருமம்
செல்வம் சேர்த்துச் செய்கின்றான்
எங்கும் கோயிற் றெண்டுகளில்
இவன்றன் தொண்டும் கலந்திருக்கும்;
பங்கம் இல்ல வகைஇளைய
பண்பன் ஒருவன் றனைநியமித்
திங்கண் இந்த அறம்வளர
எல்லாம் செய்தான் என்னேயோ! (6)

வாழி பனசைக் காசிமடம்
வாழி ஞான அருணந்தி
வாழி அவன்றன் பிற்றோன்றல்
முத்துக்குமார மாமுனிவன்
வாழி சைவம் தெய்வநெறி
வாழி இன்பச் செந்தமிழே
வாழி உலகம் வாழியிங்கே
மன்னும் உயிர்கள் வாழியவே. (7)

சும்மா

திரு. மு. அருணாசலம் அவர்கள்

இன்று பேச்சு வழக்கில் சும்மா என்ற சொல் எத்தனை விதமான பொருள்களில்தான் வழங்குகிறது! சுகமாக, அமைதி யாக, இயல்பாக, வீணாக, விளையாட்டாக, இலவசமாக, வேலை யில்லாமல், காரணமின்றி, பயனின்றி, தடையின்றி, உழைப் பின்றி, அடிக்கடி—இவை போன்ற எத்தனையோ பொருள்களில் இச்சொல் இன்று உபயோகமாகிறது. பண்டிதர் முதல் பாமரர் வரையில் ஆண்பெண் முதலான எந்த வேற்றுமையும் இல்லா மல், எல்லோரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிந்தனையே இல் லாமல், சர்வசாதாரணமாய் ஆளுகின்ற சொல் சும்மா என்பது. இச்சொல்லின் தோற்றம் யாது, பொருள் யாது, வரலாறு என்ன என்று ஆராய்ந்து அறிவது மிகவும் சுவையாய் இருக்கும்.

அருணகிரிநாதர் இச்சொல்லை ஆட்சிக்குக் கொண்டு வந் தார் என்று கற்றோர் கருதுகின்றனர்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே.

என்பது கந்தரனுபூதி 12-ஆம் பாடல், செயலற்றுச் சும்மா இரு என்று முருகன் தமக்கு உபதேசித்தான் என்று அருணகிரிநாதர் பாடியது முதல் இச்சொல்லுக்குச் சமயத்துறையில் அதுவும் சைவசமயத்துறையில் முக்கியமான இடமும் சிறப்பான பொருளும் ஏற்பட்டுவிட்டன.

மேற்கண்ட கட்டுரை 'சித்தாந்தம்' ஆசிரியர் அவர்கள் அன்பனுமதி பெற்று வெளியிடப் பெற்றது.

'சும்மா இரு' என்பதன் பொருள் அருணகிரிநாதர் போன்ற பெரியார் கருத்துப்படி; மனம், மொழி, மெய் ஆகிய மூன்று கரணங்களும் அடங்கிச் செயலொழிந்து இருத்தல் என்பதாகும். இச் செயலும், சொல்லும் நினைப்பும் அற்றிருக்கும் நிலை இறைவன் திருவருள் வரப்பட்டவர்க்கே கைகூடும்.

இந்த நிலை, இவ்வாறு சும்மா இருக்கும்நிலை, 'செயல் இல்லை' என்ற ஓர் எதிர்மறை நிலை அன்று. புறத்தே தொழிற்படுகின்ற இக்கரணங்கள் மூன்றையும் ஆண்டவன் அருள் துணையாக மாற்றி, உள்முகமாக அவனிடத்தே செலுத்தி நிற்கும் நிலையே இங்கு கூறிய 'சும்மா' என்ற நிலை.

உடலை மட்டும் செயலின்றி நிறுத்தி வைத்தல் சாமானிய மனவுறுதி உடையவருக்குக் கைகூடும். சொல்லைச் செயலின்றி நிறுத்தி வைத்தல், அதாவது உரையாடாதிருத்தல், ஒரு நாளோ வாரமோ, மாதமோ பலருக்குத் திடவைராக்கியத்தாலும், தொடர்ந்த சாதனையாலும் வாய்க்கப் பெறும். ஆனால் மனத்தை அடக்கிச் சும்மா இருக்கின்ற நிலை கைகூடுவதற்குத்தான் திருவருள் துணைவேண்டும். "கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலி யானை மேற்கொள்ளலாம்.......சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்று தாயுமான சுவாமிகள் பாடுகின்றதும் இதுவே; இது திருவருள் வசப்பட்டு நிற்கும் நிலை எனின் பொருந்தும்.

சும்மா இருத்தல் என்று நாம் இப்போது பேசுகின்ற நிலையை "மோன நிலை" என்று சைவ சமயம் கூறும். இச் சமயத்தின் பரம குருவாகிய தட்சிணாமூர்த்தி கல்லாலின் நிழலில் அமர்ந்து தம்மை நாடிவந்த முனிவர் நால்வருக்கும் மௌன உபதேசம் செய்து மெய்ஞ்ஞானத்தை விளக்கியருளினர்.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்"

என்பது பரஞ்சோதியார் கூறும் தட்சிணாமூர்த்தி தோத்திரம்.

அருணகிரிநாதர் கூறுகின்ற 'சும்மா இரு சொல்லற' என்பதும் இந்தப் பரம மோன உபதேசத்தையே காட்டுவதாகும்.

தாயுமானவர் தாம் திருச்சிராப்பள்ளியில் மௌன குருவிடம் உபதேசம் பெற்றதாகப் பாடுகிறார். அதே உபதேசத்தை முற்குறித்த இரு சொற்களால் அருணகிரிநாதர் சுட்டுகிறார் என்றே அவரையும் அவ்வுபதேசத்தையும் அவர்தம் நூலில் விதந்து ஓதுகிறார். "ஐயா அருணகிரி அப்பா உனைப்போல— மெய்யாக ஓர்சொல் விளம்பினர் ஆர்?" என்பதெல்லாம் சும்மா இரு என்ற இந்தச் சொல்லையே.

இனி, சும்மா என்ற இச்சொல் தமிழில் எவ்வாறு எப்போது தோன்றிற்று, எப்படி வளர்ந்து வந்தது என்பதையும் கால முறைப்படி சிறிது ஆராயலாம். முதல்முதல் சிவானந்த மாலை என்ற அனுபூதி நூல் இச்சொல்லைப் பலமுறை எடுத்து ஆளுகின்றது. இந்நூல் செய்தார் சம்பந்த முனிவர்; காலம் கி. பி. 1350–75.

சம்பந்த முனிவர் வரலாறு பழனியில் நடந்த சைவ சித்தாந்த சமாஜ மகா நாட்டில் 2–1–1962 இல் விரிவாகப் பேசப்பட்டது; பின் 1962–63 இல் சித்தாந்தம் இதழ்களிலும் சுருக்கமாக வெளியாயிற்று. இம்முனிவர் சைவ சந்தான ஆசாரியர் பரம்பரையில் பின் வந்த ஓர் ஆசாரியர். உமாபதி சிவாசாரியருக்குப் பின் முறையே அருள் நமச்சிவாயரும், காழி கங்கை மெய்கண்டாரும், காழிச் சிற்றம்பல நாடிகளும் சந்தான பரம்பரையில் ஆசாரியர்களாய் விளங்கினார்கள். சிற்றம்பல நாடிகளின் எண்ணிறந்த சீடர்களில் சம்பந்தர் என்பவர் பலவாற்றானும் சிறந்த முதல் மாணாக்கர். இவர் பண்டாரம் என்றே வழங்கப் பெற்றார்; இவர் தருமபுரம் ஆதீன மூல குருமாரில் ஒருவர் என்று அவ்வாதீன வரலாறு கூறும். ஞானக் கருவூலமாய் இப்பெரியார்கள் திகழ்ந்தமையால், பண்டாரம் எனப் பெயர் பெற்றனர். "பாண்டிப் பிரான் தன் அடியவர்க்கு- மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்பது திருவாசகம். ஆனால், இக்காலத்தில் பண்டாரம் என்ற சொல் மரியாதைக் குறைவானது என்று மடத்தார் கருதுகிறார்கள். ஆகவே இப்பெரியாரை இங்கு நாம் சம்பந்த முனிவர் என்றே கூறி

வருவோம். சிற்றம்பல நாடிகள் காலம் 1325–50; சம்பந்த முனிவர் காலம் 1350–75; பின்னவரே சிவானந்த மாலை பாடியவர்.

பின்வரும் சிவானந்த மாலைப் பாடல்களில் சும்மா என்ற சொல்லைக் காணலாம். கடவுள் வாழ்த்துப் பகுதியில், சம்பந்தர் தோத்திரம்:

சும்மா இருப்பவர்பால் தோன்றும் சுடரொளியைப்
பெம்மான் இவனென்ற பேராளா! —3

நேயத்தழுந்தல் என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள்:

ஓடி உழன்றிந்த உடம்பை ஒருதேநீ
பாடி மிடற்றைப்புண் படுத்தாதே—கேடுபிறர்க்கு
உம்மால் விளையாதே ஒன்றுடனும் தாக்காதே
சும்மாவே காணும் சுகம். —257.

ஓடாதே தேடாதே உன்னுதே ஓசைஎழப்
பாடாதே சாத்திரங்கள் பன்னுதே—கேடுபிறர்க்கு
உம்மாலே செய்யாதே ஒன்னுதே ஒன்றுமறச்
சும்மா இருக்கை சுகம். —258.

இம்மூன்றிடங்கள் அன்றி, சிவானந்த மாலையில் சும்மா என்ற சொல் வேறும் இரு இடங்களில் வருகின்றது; அங்கு சும்மா என்ற வடிவத்தில் வராமல் சும்மாது என்ற வடிவத்தில் வருகிறது; இந்த வடிவமே இச்சொல் பிறந்து வளர்ந்த வரலாற்றை நாம் அறிய வழி காட்டியாயுள்ளது.

எம்மான் இருந்தபடி எப்படியோ என்றூர்க்குச்
சும்மா திருப்பதலால் சொல்லுவதென்—செம்மலர்த்தாள்
அன்றுங்கா ணப்பெற்றி லேன்அடியேன் அப்பொருளை
இன்றுங்கா ணப்பெற்றி லேன். —268.

தானுவிதே டத்துவிதம் சாதிக்கும் மாண!உனை
ஆணவத்தோ டத்துவிதம் ஆக்கினரார்—கோணறநீ
என்னுளை என்னுளை என்னுளை ஏகமிரண்டு
என்னுமல் சும்மா திரு. —278.

இவ்விரு பாடல்களிலும் பயில்கிற சும்மாது என்ற சொல் எதிர்மறை வினையெச்சம். இதன் பகுதி சும்மு, சும்முதல்

மூச்சுவிடுதல் இப்பொருளில் இப்பகுதியானது பெரியாழ்வார் திருமொழியில் வந்துள்ளது:

எம்மனா என்குல தெய்வமே என்னுடைய நாயகனே
நின்னுளே னாய்ப்பெற்ற நன்மைஇவ் வுலகில் ஆர்பெறுவார்,
நம்மன் போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம்
சும்மெ னாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே.

(5 ஆம் பத்து, 4–3) சும்மெனாது— சும்மென்னாமல்; சும்மெனல்— மூச்சுவிடும் ஒலிக் குறிப்பு. இதிலிருந்து வந்த வினையெச்சமே சும்மாது (மூச்சு விடாது.) 268 ஆம் பாடலில் "எம்மான் இருந்த படி எப்படியோ என்று கேட்டவர்க்கு, நான் மூச்சும் விடாமல் அடக்கி இருப்பதல்லால் வேறு என்ன சொல்லுவதற்கு இயலும்?" என்பது முதலிரு வரிகளின் கருத்து. சும்மாது என்ற வினை யெச்சத்தில் து என்ற விகுதி, நாளடைவில் கெட்டு, சும்மா என்ற வடிவமே நிற்பதாகி, மூச்சடக்கி என்ற பொருளும் மறைந்து அப்பொருளால் விளையும் பயனாகிய செயலின்மையை மட்டும் குறித்து நின்று விட்டது. பிற்கால நூல்களில் சும்மா என்றால், செயலின்றி, வாளா, என்ற பொருளே தோற்றுகிறது. மூச்ச டக்கி என்பதுதான் பொருள் என்று "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்ற தாயுமானவர் திருவாக்கும் உய்த்துணர வைக்கிறது.

மூச்சு அடக்கி என்ற கருத்தோடு இங்கு நாம் அருண கிரிநாதர் வாக்கின் பொருளைத் தெளிவு செய்து கொள்ளுதல் கூடும். "சும்மா இரு சொல்லற" என்பது அவர் வாக்கு. மனம் மொழி, மெய் என்ற மூன்று கரணங்களில் மெய் அடங்கிவிடும்; பிறரும் அதன் அடக்கத்தைப் புறத்தே காணவும் முடியும். மனம் அடங்குவது மிகவும் கடினம், அருள் வசத்தால் ஆவது; பிறர் அதனைக் காண்பதும் அருமை. இரண்டுக்கும் இடைப் பட்டது சொல். சொல்லற அடங்கியிருத்தல், முயன்று சாதிக் கத்தக்கது. இந்த அடக்கத்தைப் பிறர் புறத்தே காணுதலும் கூடும்.

மேலும், சும்மாது இரு என்ற கருத்தை முறையாக மூச்சை யடக்கி என்று கொள்வோமானால், இது சைவ சித்தாந்தம்

கூறும் நான்கு மார்க்கங்களுள் மூன்ருவதாகிய யோக மார்க்க மாகிறது. இது சிவஞான சித்தியாரில் சுருக்கமாகக் காட்டப் பட்டுள்ளது; அது.

சகமார்க்கம் புலனடக்கித் தடுத்துவளி யிரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்கள்
சகமார்க்கம் அறிந்து அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து

எனவரும். (273) வளி இரண்டும் தடுத்துச் சலிப்பற்று என்பது பூரகரேசகம் இரண்டையும் நிறுத்திக் கும்பித்தலிஞல் ஏற்படும் மனச் சலிப்பற்ற நிலே; இதுவே சும்மாது என்ற நிலே.

முற்கூறிய சம்பந்த முனிவர் காலத்திலிருந்து சும்மா என்ற சொல்லுக்குச் சைவ சமய நூல்களில் ஆட்சிநிரம்ப ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மாணுக்கருள் காழிக் கண்ணுடைய வள்ளலும் ஒருவர். இவர்காலம் 1375–1400. இவர் பாடிய முக்கிய நூல் ஒழிவிலொடுக்கம். இதனுள் ஐந்திடங்களில் சும்மா என்ற சொல்லேயும், ஓரிடத்தில் மட்டும் சும்மாது என்ற வடிவத்தையும் இவர் உபயோகிக்கிருர்.

தம்மால் அறிந்த தெல்லாம் தாமல்ல என்றுரைத்தால்
சும்மா இருப்பதுவாய்த் தோன்ருதோ? —37.

—காட்சியறச்

சும்மா இருக்கில் அசையாது சுற்றுவிறிசு
அம்மானே பம்பரங் காணும். —105.

கிரியைக்கு இளைத்துவந்து கேட்டவர்க்குள் சும்மா
திரியச் சுகம்விளைத்த சீமான். —128.

சும்மா இருக்கவைத்த சூத்திரமாம் சாத்திரத்தை
விம்மாக் கதறுவதும். —131.

என்னுணே என்னுணே ஏகமிரண் டென்னுமல்
சும்மா இருவென்று சொன்னுன். —151.

கடைசியில் காட்டிய உதாரணத்தில் இவ்வாசிரியர் தம் குருவான சம்பந்த முனிவரின் சிவானந்த மாலே 276-ஆம் பாடலேயே எடுத்துக் கூறுகிருர் என்பது வெளிப்படை. இனி சும்மாது என்ற பிரயோகம் வருமிடம் பின்வருமாறு:

"சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியாம்." (66)

"தீவிரதர பக்குவர்க்கு ஒரு மொழியும் கூறுது ஞானசாரியர் மௌனனந்த நோக்கால் பார்த்திருக்கவே, ஆன்ம சுத்தியாம்; திருநோக்கக் குறிப்பால் அந்நிலை தெரிந்து கோடலின், சும் மாதே பார்த்திருக்க என்றார்" என்பது இவ்வரிக்குத் திருப் போரூர்ச் சிதம்பர சுவாமிகள் எழுதிய உரை. இங்கு சும்மாது என்ற சொல்லுக்கு சும்மா என்றே கொண்டு, இன்றும் வழக்கி லுள்ள 'பேசாது' என்ற பொருளே சொல்லப் பட்டுள்ளது.

சும்மாது என்ற வடிவம் பரஞ்சோதி முனிவர் (18 ஆம் நூற்றாண்டு) பாடிய திருவிளையாடற் புராணத்திலும் பயில் கின்றது. 'சும்மாது சிரந்தூக்கி எதிராடாதிருந்தார்'–பரி நரி யாக்கிய படலம், 41. 'சும்மாது–வாளாது வாளா; 'து' பகுதிப் பொருள் விகுதி' என்று இதற்கு உரை கூறியிருக்கிறார்கள். அச்சத்தாலும், இகழ்ச்சி உணர்வாலும் மூச்சுக்கூட விடாமல் தலையை உயர்த்தி மறுமொழி பேசாது வாளா இருந்தார்கள் என்பதே இதன் திருத்தமான பொருள்.

சம்பந்த முனிவரும் அவர் மாணக்கர் கண்ணுடையவள் ளலும் 14 ஆம் நூற்றாண்டில் பெருவாரியாக வழக்குக்குக் கொண்டு வந்த சும்மா என்ற இந்தச் சிறு சொல் அக்கால முதல் தமிழ் மொழியில் பெருவழக்காக ஆட்சிக்கு வந்து நிலைத்து விட்டது. அடுத்த நூற்றாண்டில் (15) காளமேகம், "உமக்குப் பாடத் தெரியுமோ?" என்று அதிமதுர கவிராயர் தம்மைக்கேட்ட போது தாம் கூறிய விடையில் இச்சொல்லை உபயோகிக்கிறார்.

இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மெனவே ஆயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யாகில்
பெருங்காள மேகம் பிளாய்.

கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனு பூதி பாடிய அருணகிரி நாதரும் இந்நூற்றாண்டில் (15) வாழ்ந்தவர். அவர் பாடிய பாடல் "சும்மா இரு சொல்லற" என்பது தொடக்கத்தில் காட்டப்பட்டது. கந்தர் அலங்காரத்திலும் அவர் இச் சொல்லை உபயோகிக்கிறார்.

சொல்லுகைக்கு இல்லையென்று எல்லாம் இழந்து
சும்மா இருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்டவா"

என்பது அலங்காரம் 10 ஆம் பாடல். அருணகிரி நாதருடைய ஆட்சிகாரணமாக இச்சொல்லுக்குச் சைவவுலகில் பெருமதிப்பும், பெரும் பொருண்மையும் விளைந்துள்ளன. இவருக்கு முருகப் பெருமான் சும்மா இரு என்று உபதேசித்த பொருள் ஆகிய திறத்தை 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் வாக்கையும் பெயரையும் சுட்டியே பாராட்டுகிறார்.

சும்மா இருவெனநீ சொல்லப் பொருள்ஒன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த—எம்மான்
அருணகிரி நாதன் அனுபவம் நாயேற்குக்
கருணைபொழி போரூரா காட்டு.

இனி 16 ஆம் நூற்றாண்டில் தருமபுரம் ஆதீனத்தை ஸ்தாபித்த குருஞான சம்பந்தர் தாம் செய்த சிவ போக சாரம் என்ற சிறந்த சைவ சிந்தாந்த ஞானசாத்திரத்தில் இரண்டு பாடல்களில் சும்மா என்ற சொல்லை உபயோகிக்கிறார்.

அருளறிந்து தானும் அறிவறிந்தே ஆங்குட்
பொருளறிந்து தானடங்கிப் போத—இருளகல
விம்மா திருந்து விகற்பமற ஒன்றாகிச்
சும்மா இருக்கை சுகம்.

சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம்—நம்மான்
செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதென்றால்
எய்தவனை நாடி யிரு. —101

இங்கு சும்மா என்ற சொல் முதலாவது செயலற்று இருத்தல் என்றும், இரண்டாவது பாடலில் பாடுபடாமல் இருத்தல் என்றும் இருவேறு பொருள்கள் தருகின்றன.

இனி 17-ஆம் நூற்றாண்டுக்கு வந்தால், சும்மா என்ற சொல்லைக் குமரகுருபரர் உபயோகிக்கக் காண்கிறோம். பண்டார மும்மணிக் கோவை 9-ஆம் பாடல்,

எம்மா ருயிராம் எழில்மா சிலாமணியை
அம்மா பெறுதற் கரிதன்றே-சும்மா
இருந்தாரே பெற்ருர்மற் றெவ்வுலகில் யாரே
வருந்தாது பெற்ருர் மணி.

திருச்செந்தூர் முருகப் பெருமான் மீது அகவல் பாடிய சிற்றம் பல நாடிகள் என்ற பெரியார் கூறுகிருர்.

சும்மா இருக்கச் சொன்னதோர் வார்த்தை
அம்மா அதிசயம் ஆருடன் புகல்வேன்

தாயுமானவர் அருணகிரிநாதரைப் பின்பற்றிச் சும்மா என்ற சொல்லை மிகப் பலவான இடங்களில் பொருள் நிரம்பப் பொதிந்து வைக்கிருர். சில உதாரணங்களைக் காணலாம்.

பிறர் கேட்கவே

போதிப்பது அல்லாது சும்மா இருந்துஅருள்
பொதிந்திடாப் பேதை நானே
சொல்லால் முழக்கவோ சுகமில்லை மௌனியாச்
சும்மா இருக்க அருளாய்
சும்மா இருக்க எண்ணினேன் எண்ணமிது
சுவாமி நீ அறியாததோ

சும்மா இருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்கும்
சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே:

[இக்கருத்து முற்காட்டிய சிவானந்த மாலை 257-ஆம் பாடலிலும், சிவபோக சாரம் 101 ஆம் பாடலிலும் கண்ட கருத்து].

ஏதுக்குச் சும்மா இரு மனமே என்று எனக்குப்
போதித்த உண்மை எங்கே போகவிட்டாய்?

ஏதுக்குச் சும்மாஇரு நீ! என உரைத்த
சூதுக்கோ,

[இப்பிரயோகங்கள் இரண்டும் அருணகிரி நாதர் வாக்கைத் தழுவி வந்தவை]

சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோன
என்னை வாழ்த்தி விட நினக்கேபரம்—இனிச்
சும்மா இருக்கத் தகும் என்றுமே

சும்மாவே இருக்க வைத்தாய் ஐயா ஆங்கே
சுகமாயிருப்பதல்லாற் சொல்வானென்னே?
அப்பனே—நீயற்ற எல்லையிலே சும்மா இரு
சும்மாவே இருக்க வைத்தாய்.

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே!
சும்மா இருந்தால்—தானே அணைவர்

இவை தாயுமானவர் பாடலில் கண்ட சில உதாரணங்கள். சிறந்த முருக பக்தரான திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இச் சொல்லைப் பாடியிருப்பது முன்னமே குறிப்பிட்டோம். "சும்மா இருக்கச் சுகமுதய மாகிவிடும்" என்பது வேத சிரோதயம் என்ற நூல். ஞான மணிமாலை என்ற நூல் (18 நூ.) சும்மா என்ற சொல்லைக் கூறுகிறது.

பேதமற்று நிட்டையற்றுப் பூரணமாம் உண்மைதனில்
ஏதமற்றுச் சும்மா இரு
முத்திச் சிவானந்தம் முட்டாமல் மேன்மேலும்
தத்திக் கரைபுரண்ட தானலும்—நித்தியமும்
உன்னல் முழுகிலது உன்னுணை விற்று விடும்
என்னுணை சும்மா இரு.

இங்ஙனமாக, முதல் முதலாகத் தமிழிலக்கியத்தில், அதிலும் சைவ சமய இலக்கியத்தில், சும்மா என்ற சொல் 14ஆம் நூற்றுண்டில் தலைகாட்டி, காலக் கிரமத்தில் சமயப் பெரியார் பலராலும் உபயோகிக்கப் பெற்று இன்று பல வேறு பொருள்களைத் தருவதாய் சாமானிய வழக்கில் எல்லோராலும் எதற்கும் உபயோகிக்கத் தக்க ஒரு சொல்லாக ஆகியிருக்கிறது என்பதைப் பார்த்தோம். தொடக்கத்தில் மூச்சுவிடாமல், மூச்சடக்கி என்ற பொருள்களில் இச்சொல் எழுந்தது என்பதையும் கண்டோம்.

சங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

---o---

இயற்கையோடியைந்த வாழ்வு

இயற்கையோடியைந்த இன்ப வாழ்வினைக் கண்டநாடு தமிழர் நாடு. இயற்கைப் பொருள்கள் அத்தனையூடும் ஒல்லும் வகையால் நல்லுறவு கொண்டு நிலவிய சிறப்பினம் தமிழரினம். இவைகளை நினைந்து நினைந்து அனுபவித்து நெஞ்சுருகக் கவிதை பாடித் தந்திருக்கின்றார்கள் நம்மவர்கள்.

புன்னையும், ஓர் தமக்கை

அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே!

என்ற நற்றிணைப் பாட்டுத் தமிழ் உள்ளம் இயற்கையோடு பின்னிப் பிணைந்த மாட்சியினை விளக்குவதாகும். தான் சிறு வயதில் விளையாடும் போது விளையாட்டாக மண்ணில் புதைத்த புன்னைக் கொட்டை வளர்ந்து மரமாகியிருப்பதைத் தாயொருத்தி தன் மகளிடம் ஒரு நாள் கூறிவைத்தாள். இதனைக்கேட்ட மகள் தனது அன்னை வளர்த்த மரமாகையால், அதனைத் தனது தமக்கையாகக் கொண்டு அதன் கீழிருந்து காதற் பேச்சுப் பேசவும் நாணுவதாகக் கூறுகிறது அப்பாட்டு.

இயற்கையின் அஃறிணைப் பொருளைத் தம் வாழ்வுடன் சேர்த்துக் கொண்டது மட்டுமல்ல. அதில் மனிதப் பண்பையும் ஏற்றி உறவாக்கி அதற்கு மதிப்பளித்துத் தான் நாணுகின்ற நற்காட்சி உலக இலக்கியங்களுள் எங்காவது காண முடியுமா என்பதும் ஐயமே!

மங்கையின் நெஞ்சும் மான்களின் இன்பமும்

தாவரங்களுடனேயே இப்படி ஒன்றி வாழ்ந்த தமிழ் மக்கள் விலங்குகளுடனும் இயன்ற வரையில் அருளும் அன்பும் பண்பும் பாராட்டி வாழ்ந்தனர் என்பதைக் கூறவேண்டுவதில்லை. புற நானூற்றிலே ஒரு பாட்டு.

'பார்வை மடப்பிணை தழீஇ பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணவயின் தீர்தலும் அஞ்சி யாவதும்
இல்வழங் காமையின் கல்லென ஒலித்து
மானதட் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென!'

என்று வருகின்றது.

முற்றத்தில் முன்னையும் முசுண்டையும் பம்பிய நீழல். பார்வை மானைக்கட்டி வைத்து விட்டுப் படுத்து உறங்குகின்றான் வேட்டுவன். பக்கத்திலே மானின் தோலில் அடுத்த வேளை உணவிற்குரிய தினை காய்ந்துகொண்டிருக்கின்றது. காட்டு மான் ஒன்று பிணவாகிய பார்வை மானுடன் சேர்ந்து விளையாடி இன்பம் கண்டது. குறமகள் குடிலின் உள்ளே இருந்த வண்ணம் இதனைக் கண்டாள்.

தான் பிடிபடப் போகின்றோம் என்பதை அறியாத ஆண் மானும், தன்னால் ஆண்மான் பிடிபடப் போகின்றது என்பதை அறியாத பெண்மானும் எவ்வளவு அழகாக விளையாடிக் கொண்டிருக்கின்றன! எவ்வளவு அருமையான சோடிகள் அவை! அவளுடைய அன்பான நெஞ்சம் அவைகளைப் பிரித்துத் துன்புறுத்துவதை வெறுத்தது. அது தனது குடும்பத்தொழில் என்றாலும் மான்களின் இன்புறு புணர்நிலை கண்ட அவள் அவைகட்குத் துன்புறு பிரிநிலை கொடுக்க எண்ணவில்லை.

எனவே, தன் கணவன் அப்படியே உறங்கட்டும் என்று அவனை எழுப்பிவிடாமல் அமைதியானாள். ஆனால் அவளுக்கு

ஒரு சோதனை வந்தது. நல்ல உள்ளங்களுக்கு சோதனை வருவது தான் இயற்கை போலும். அதே நேரத்தில் அடுத்த வேளை உணவிற்காக காயவைத்திருந்த உணவைக் காட்டுக் கோழிகள் கூட்டமாக வந்து தின்றன. அவைகளை விரட்டா விட்டால் சற்று நேரத்தில் தினை முழுவதையுமே அவைகள் தீர்த்துக் கட்டிவிடும்.

பறவைகளை ஓட்டச் சென்றாலோ கணவன் விழித்துக் கொள்வான். விழிப்பின் ஆண் மான் இறப்பது உறுதி. இல்லாவிட்டாலும் தனது செய்கையால் சலன முற்று மான்கள் அமைதி இழந்து பிரிந்து விடும். என்ன செய்வது என்று யோசித்தாள். அவள் அருள் கொண்ட நெஞ்சம் தனது உணவையே இழக்க முடிவு செய்து விட்டது. அடுத்த வேளை பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை. கணவன் எழுந்த பிறகு தன்னைக் கடிந்து கொண்டாலும் பரவாயில்லை. மான்களின் இன்பம் கெட்டுவிடக்கூடாது என்று வாளாயிருந்து விட்டாளாம் அந்த மங்கை.

இப்படி மெல்லிய நெஞ்சோடு, இரக்கம், அன்பு, அருள் ஆகிய பண்புசால் மக்களிடையே பிறந்த நக்கீரர் தன்னுடைய பாடல்களிலும் இவைபோன்ற சில நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றார்.

சிலை நுதலி சீறினாள்:

வேட்டுவக் குமரன் ஒருவன் மலைஎங்கும் சுற்றித்திரிந் தான். தகுதியான ஒரு மிருகமும் அவனது அம்பிற்கு இலக்காக வில்லை. மென்மை நிறைந்த மான் ஒன்றைக் கொல்வதுதான் அவனுக்கன்று எளிமையாக இருந்தது. மான் தசை சுவை மிகவும் உடையதல்லவா? ஆனால் அப்படி இறுதி முடிவு செய் வதற்குள் அவன்மனம் மாறிவிட்டது. இந்த மானைக் கொன்று எடுத்துப் போவதைவிடக் கொல்லாமல் பிடித்துச் சென்றால் என் வீட்டு மான் இந்தக் காட்டு மானைக் கண்டு காமுறவும் கூடும். அதுவே சரி. எண்ணம் செயலாக மாறியது.

அது பெண்மான். வலைவைத்துப் பிடித்து அதைச் சுமந்து சென்றான். வீட்டுக்குப் போனஉடன் மனைவி மகிழ்வுடன் ஓடி

வந்து, "ஏது மான்? என்ன மான்? எப்படிப் பிடித்தீர்கள்? என்று கேட்டுக் கிளர்ச்சியுறுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் நடந்ததோ வேறு.

மகிழ்ச்சியோடு வேடன் கீழ் இறக்கிய மான், அதுவும் பெண் மான் எனக் கண்டதும், அக்குறத்தியின் நிலையே மாறியது ஓ....என்று கதறியே விட்டாள். அந்த மானைத் தன் அரவணைப் பில் பிடித்துக் கொண்டாள். "என்ன செயல் செய்தீர்கள்? உங்களுக்கு ஏதாவது புரிகின்றதா? உலகத்தில் நீங்கள் வாழ் வதுதான் வாழ்க்கை. மற்றவர்கள் சாவதற்கும் துயரப்படுவதற் குமே பிறந்திருக்கின்றார்கள் என்ற எண்ணமா? வன்மையுடைய வர்கள் மென்மையாளர்களை அழிப்பது என்பதுதான் உங்கள் கொள்கையா? கணவனையும் மனைவியையும் பிரித்து வைப்பது தான் உங்கள் பண்பா? மற்றவர்கள் உணர்ச்சியைப் பற்றி எண்ணிப் பார்க்கவே உங்களுக்குத் தெரியாதா? சீ........சீ....... என்ன வாழ்க்கை இது." சீறி எழுந்தாள். சிலைத்தாள் அச் சேயிழையாள். அவள் கண்கள் சினத்தால் சிவந்தன. இன்பத் தையும் மகிழ்ச்சியினையும் இனியதோர் சூழலினையும் எதிர் பார்த்து வந்த குறவன் அதிர்ச்சியடைந்தான். "என்ன சொல்லுகிறாய்? நீ" 'போதும் நிறுத்துங்கள். இந்தப் பெண் மானை மட்டும் பிரித்துப் பிடித்து வந்திருக்கின்றீர்களே. அதனைத் தான் சொல்கிறேன். இந்நேரம் அந்த ஆண்மான் எப்படி யெல்லாம் அயர்வுறும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தீர்களா? இந்தப் பெண்மான் எப்படி அதிர்ச்சியடைகின்றது என்பதை அதன் விழிகளைப் பாருங்கள் தெரியும். நமது மகிழ்ச்சிக்காக மற்றவர்களின் மகிழ்ச்சியினைப் பலியாக்குவது என்றால் உலகமே விரைவில் வலியும், வசதியும் உள்ளவர்களே சிரிக்க மற்றவர்கள் அழுகின்ற துயரக் காடாகிவிடும்.

ஆண் மானைத் தவிக்க விட்டு விட்டு இப்பெண்மானைக் கொணர்ந்ததை என்னால் பொறுக்கவே முடிய வில்லை. இது நீங்கள் செய்த பெரிய இழுக்கு. இனிமேல் மறந்தும் இப்படிப் பிரிவு வேலைக்குச் செல்லாதீர்கள். எங்கே பிடித்தீர்களோ அங்கேயே கொண்டு விட்டு விடுங்கள். அதுவே உங்களுக்குக்

கழுவாய்!' குறவன் ஒரு புறம் வருத்தமும் மறுபுறம் தனது மனைவியின் உணர்ச்சி நிறைந்த பேச்சைக் கேட்டு மகிழ்ச்சியும் அடைந்தான்.

இதனைக் கேட்ட வண்ணம் அப்பக்கம் செல்கிறார் நக்கீரர். உலகத்திற்குத் தொல்லை கொடுப்பதற்காக வந்த மானைக்கூட அருளோடு கைக் கொண்டு காக்கும் சிவபெருமானின் அருட் பண்பு அங்குள்ள மக்களிடத்தெல்லாம் தெளிவாக இவ்விதம் புலப்படுவதை நினைத்துப் பாடுகின்றார்,

மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கிச்
சிலைநுதலி சீறிச் சிலைத்துக்—கலைபிரிய
இம்மான் கொணர்தல் இழுக்கென்னும் ஈங்கோயே
மெய்ம்மான் புணர்ந்தகையான் வெற்பு.

என்பது அப்பாடல்.

கன்னிமான் விழிகள்

பிறிதொருநாள், காட்டின் வழியே நீட்டிநடை போட்டுக் கொண்டிருந்தான் அவ்வேடன். மானொன்று மேய்ந்து கொண் டிருப்பதைக் கண்ணுற்றான். வில்லை வளைத்துக் குறிபார்த்து அம்பைத் தொடுத்தான். முன்னால் தன் மனைவி பெண்மானைக் கண்டு சீறியெழுந்தது அவனுக்கு நினைவேயில்லை.

அந்த மான் தன்போக்கில் வேடனை நோக்கி அசைப்பில் திரும்பியது. அவ்வளவு தான் வேடனுக்கு எல்லாம் நினைவு வந்து விட்டது. அவனிடத்தில் பெரியதோர் மாற்றம் நிகழ்ந் தது. அந்த மான் விழிகள் அவனது மனைவியை நினைவூட்டி விட்டன. இம்மான் கொணர்தல் இழுக்கென்று அவள் அன்று கூறியதெல்லாம் நினைவு கூர்ந்தான். இனியும் அந்த மானைக் கொல்ல அவன் என்ன பைத்தியமா? அவன் உள்ளத்தில் அன்பும் பாசமும் தேங்கியது. அன்பென்னும் கொடியும் ஏதா வது ஒரு இலக்கை வைத்துக் கொண்டுதானே படருகின்றது. வேடனின் நெஞ்சும் தன் மனைவி மூலமாகவே மானிடத்திலும் அன்பு செலுத்தத் தொடங்கியது.

'கன்னிப் பருவத்து மானே! என்ன பார்க்கிருய் கணை தொடுத்து விட்டேன் என்ரு? இல்லை எடுத்து விட்டேன். இனி நீ மெல்லப்போ. ஆடி ஓடி விளையாடி உன் அன்புத் துணையோடு மகிழ்ச்சி கொள், போ'. அவன் கரங்கள் மெல்ல் அசைந்து அந்த மானுக்கு விடை கொடுத்தன.

இவ்வாறு மலைக்குறவர்கள் வாழ்வு அங்குள்ள விலங்கினத் தின் வாழ்வுடன் கலந்து மயங்குவதையும் அதில் அன்புச் சுழல்களும் கருணை அலைகளும் தோன்றுவதனையும் கண்டு மகிழும் நக்கீரர் மேற்குறிப்பிட்ட அக்காட்சியை,

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதென
கையில் கணைகளைந்து கன்னிமான்—பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்ருன் சிலம்பு.

என்ற பாட்டில் குறிப்பிடுகின்ருர்.

ஆயம் பிரிந்து விட்டமான்

குறப்பெண்கள் அன்பும் உதவி மனப்பான்மையும் கொண்டு விளங்குகின்ருர்கள். மான்குட்டி ஒன்று தனது இனத்தைப் பிரிந்து வந்து விட்டது. பழகிய நண்பரையும், இடத்தையும், சுற்றத்தையும் விட்டுப்பிரிதல் என்பது பெருந்துன் பம் தரவல்லதாகும். மான் குட்டியோ மிகவும் சிறியது. தனது கூட்டத்தைப் பிரிந்து வந்து தவித்தது. இதைக் குறப்பெண் களின் ஆயம் ஒன்று கண்ணுற்றது.

மான்குட்டி கண்ணிற்கு அழகாக இருக்கும். இளம்பரு வத்தில் பிடித்துச் சென்ருல் வளர்க்கவும் எளிது. அதனைப் பார்வை மாஞகப் பழக்கவும் வழியுண்டு. இவ்வழிகள் எல்லாம் அப்பெண்களுக்கும் தெரியும். இருப்பினும் தன்தாயைப் பிரிந்து தவியாய்த் தவிக்கின்ற குட்டிமானின் அலைபாயும் நெஞ்சமே அவர்கள் இரக்கத்திற்கு இலக்காயிற்று.

ஒருத்தி அதை அன்போடு பிடித்து அரவணைத்தாள்; இன் ஞெருத்தி சந்தனக் கொழுந்தைப் பறித்து வந்தாள். மற்

ஞெருத்தி எங்கிருந்தோ தேனையும் கொண்டு வந்தாள். அந்த மான் குட்டிக்கு ஒரே மருட்சி. என்ன இது! இந்தப் பெண் மான்கள் கையில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே என்று திமிறி ஓடப் பார்த்தது. ஆனுல் அவர்கள் விடுவதாக இருந் தால் தானே! தாயைப் பிரிந்து விட்டதே! கவலையோடு உண் பிக்கின்ற தாய்மான் இல்லையே! என்று கைவளைகள் ஒலிக்க ஒலிக்க அதற்குத் தேனில் தோய்த்துத் தோய்த்துச் சந்தனத் தழையை ஊட்டுகின்ருர்களாம் அப்பெண்கள். மலையை வில்லாக வளைத்தான் மலையில், சிலைநுதலார் சிலர் இவ்விதம் மான் குழ விக்கு உணவூட்டும் செய்தி

அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர்—சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை.

என்ற பாட்டில் சொல்லப்படுவதைக் காணலாம்.

உ
திருச்செந்திலாண்டவன் துணை
ஸ்ரீ 'குமரகுருபரன்'
திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள்நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளிநாடு வருடச் சந்தா	5 ஷிலிங்ஸ் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 10-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

36 நில்லாதநீர்சடைமேனிற்பித்தானை
நினையாவென்னெஞ்சைநினைவித்தானைக்
கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக்
காணாதனவெல்லாங்காட்டினானைச்
சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத்
தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு
பொல்லாவென்னோய்தீர்த்தபுனிதன்றன்னைப்
புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனானே.

We give next a series of stanzas in various metres from different hymns, in which the saint utters in song some of the joy which his religion has brought him. God has revealed mysteries to him which tongue cannot tell, and dwells in his life's innermost places. God is to him the fabled katpaha tree, supplying his every need. God is his all in all, and His presence is sweeter than melody or evening moonlight.

36 The moving water He made stand unmoving in His hair;
And He my thoughtless heart hath fixed in thought of Him alone;
He taught me that which none can learn, what none can see laid bare;
What tongue tells not He told; me He pursued and made His own.
The spotless pure, the holy One, my fell disease He healed,
And in Punturutti to me, e'en me, Himself revealed

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)